இரத்மலானை பல்கலைக்கழகக் கல்லூரிம் - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இரத்மலானை பல்கலைக்கழகக் கல்லூரியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்ளையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் இருந்தான தாக்கத்தை தவிர நிதிக் கூற்றுக்கள் கல்லூரியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

ந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கல்லூரியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக கல்லூரியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை மாற்ற வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால

நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கல்லூரியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கல்லூரியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

	குறித்த நியமங்களுடன் தொடர்புடனான இணக்கமின்மை	முகாமைத்துலத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 40 ஆம் பந்தியின் பிரகாரம் வட்டி வருமானத்தின் மூலம் உருவாகும் காசு பாய்ச்சல்கள், காசு பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு அல்லது முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் வேறாக இனங் காணப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ஆரம்ப மற்றும் இறுதி வட்டி வருமானத்திற்கு இடையே வேறுபாடான ரூபா 391,780 ஆன பெறுமதி மாத்திரம் தொழிப்பாட்டு செயற்பாடுகளின் கீழ் காசு பாய்ச்சலாக பதிவு செய்யப்பட்டு இருந்தது.	மீண்டும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் ஊடாக இத்தவறுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	உரிய கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க, வட்டி வருமானமானப் பெறுவனவு செயற்பாட்டு அல்லது முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ தனியாக இனங்காணப்பட வேண்டும்.

(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்து உருப்படியொன்று மற்றும் அண்மித்த எதிர்கால நலன் அல்லது சேவை சாத்திய வளத்தை நிறுவனத்திற்கு பாயும் தேவைப்பாட்டு உள்ள போது மற்றும் கிரயத்தை விசுவாசமாக அளவிடக்கூடிய சொத்தொற்றாக இனங் காணப்பட வேண்டிய போதிலும் ரூபா 7,996,196 ஆன நிர்மாணிக்கப்பட்டு கட்டிடங்கள் நடைமுறை சொத்துக்களாக பதிவு செய்யப்பட்ட காரணத்தினால் அப்பெறுமதியால் நடைமுறை சொத்துக்கள் அதிகரித்தும் நடைமுறை அல்லாத சொத்துக்கள் குறைத்தும் நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிருந்தது.	இது நிலையான சொத்துக்களின் Building renovation WIP கீழ் என உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டிடங்களின் கிரயம் (முடிவுறாத வேலைகள்) பொருத்தமான வகையில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் இனங்காணப்பட வேண்டும்.
(இ)	கல்லூரி அமைந்துள்ள இரத்மலான மேல் பிரதேச செயலகத்திற்குரிய 3 ரூட் 3.9 பேர்ச் அளவிலான காணியை கல்லூரிக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் அதன் பெறுமதி இலங்கை பொதுத்துறை கணக்கு நியம இலக்கம் 7 இன் 35 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் பெறுமதி மதிப்பிடப்பட்டு சொத்து ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் காணியின் பெறுமதியை கணக்குகளளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காணி முறையாக மதிப்பிடப்பட்டு, அதற்கான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஈ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கு செயற் திறனான ஆயுட்காலம் ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதி திகதியில் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் ரூபா 7,263,377 கிரயமான நூலக புத்தகங்கள் மற்றும் ரூபா 563,000 ஆன ஏனைய சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்துவதற்கு முடியுமாக இருந்த போதும் முழுமையாக பெறுமானத்தேய்வு	வருடாந்த பொருள் மெய்மையாய்வு செய்வதன் பின்னர் ஆக்கபூர்வமான ஆயுட்காலத்தை மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமத்தின் படி, ஒவ்வொரு நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் அறிக்கைக் காலத்தின் முடிவிலும மதிப்பிடப்பட்டு, அதற்கேற்ப தேய்மானம் சரிசெய்தல்கள் செய்யப்பட வேண்டும்.

	செய்யப்பட்டு இருந்தது அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீட்டுத் தவறை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் பிரகாரம் மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை		
(உ)	செயற்திட்டமொன்றின் மூலம் 2023 ஆம் ஆண்டின் போது கல்லூரிக்கு கிடைத்திருந்த மொத்தம் ரூபா 6,072,937 பெறுமதியான 11 டெஸ்க்டொப் கணினி இயந்திரங்கள் 4 மடிக் கணினிகள், இலகு பெயர் பலகை (Smart board) UPS உபகரணம் ஒன்று மென்பொருள் முறைமை (Security gateway firewall, operating system and processing Software for Laptop) மற்றும் ஏனைய உபகரணங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கு கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் 44 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீடு முழுமையாக விடுபட்டிருந்தது	எதிர்காலத்தில் இச்சொத்துக் களின் பெறுமதியை கணக்குகளில் உள்ளடக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மானியங்களாகப் பெறப்பட்ட சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு, நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும்.
(ஊ)	இலங்கை பொதுத்துறை கணக்கு நியம இலக்கம் 19 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் ஊழியர்களின் பணிக்கொடை பொறுப்பு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் நிறுவனம் தனது ஒவ்வொரு ஊழியர் சேவை புரிந்த முழு வருடங்களின் எண்ணிக்கை அரை மாத சம்பளத்தால் பெருக்குவுதன் மூலம் பணிக்கொடை கணிப்பீடு பொறுப்பு கணக்கிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் அறிக்கை இடப்பட்டிருந்த ரூபா 7,642,066 ஆன பணிக்கொடை ஒதுக்கீட்டு பெறுமதி உரிய நியமத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை	எதிர்காலத்தில் சரியாக முறையில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தொடர்புடைய கணக்கீட்டு நியமங்களின் படி ஊழியர் பணிக்கொடைப் பொறுப்பானது, கணக்கிடப்பட வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடு

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துலத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டிற்குரிய அதாவது 2025 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் நிலுவைச் சம்பளம் ரூபா 836,195 மீளாய்வாண்டின் செலவினமாக பதிவு செய்யாமல் 2025 ஆம் ஆண்டின் செலவினமொன்றாக பதிவுசெய்த காரணத்தினால் அப்பெறுமதியால் மீளாய்வாண்டின் செலவினம் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் இந்தச் செலவினங்களைத் சரியாகச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	செலவினம் தொடர்புடைய நிதியாண்டில் கண்டறியப்பட்டு, அதற்கேற்பச் சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	காசு பாய்ச்சல் கூற்றில் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் பெறுமதி ரூபா 942,000 தொகை குறைத்து பதிவு செய்யப்பட்டிருந்தது.	இது னாசுப் பாய்ச்சல் கூற்று மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது	நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரியான மீதிகள் சேர்க்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்த வேணடும்.
(இ)	மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுகளின் பிரகாரம் கற்றல் உபகரணங்களில் (Teaching Equipment) தேறிய பெறுமதி ரூபா 7,001,952 ஆக இருந்த போதும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் அது ரூபா 10,100,355 என பதிவு செய்யப்பட்ட காரணத்தினால் அப்பெறுமதிக்கிடையே ரூபா 3,098,403 வேறுபாடு ஒன்றும் நிதிக் கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய சொத்துக்களின் பெறுமானத்தேய்வு ஒதுக்கீட்டுப் பெறுமதி 18,640,005 ஆக இருந்த போதும் நிலையான சொத்துக்கள் அட்டவணையின் பிரகாரம் பெறுமதி ரூபா 15,305,841 ஆக இருந்த காரணத்தினால் அப்பெறுமதிக்கு இடையே ரூபா 3,334,164 வேறுபாடு ஒன்று காணப்பட்டது .	கற்றல் உபகரணங்களின் தேய்மானத்தில் ஒரு பிழை ஏற்பட்டுள்ளதுடன், அதைச் சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள், மீண்டும் சுயாதீனமாக உரிய பதிவுகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டு சரியானதன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

1.6. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்	முகாமைத்துலத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(1) ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் அரசிற்கு சொந்தமான முயற்சிகளின் (SOEs) இற்கான வழிகாட்டியின் 4.2 (ஏ) பந்தி	நிறுவனத்தின் நிர்வாக சபையால் உரிய வகையில் நியமிக்கப்பட்ட தமது உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இருக்க வேண்டிய போதிலும் கல்லூரிக்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படா திருந்ததுடன் அதன் காரணமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ பொதுக் கூட்டங்கள் மீளாய்வாண்டில் நடத்தப்பட்டு இருக்கவில்லை	நிறுவனத்திடம் அங்கீகரிக்கப்பட்ட உள்ளகத் கணக்காய்வாளர் இல்லாதிருந்ததுடன் , தொழிற்கல்வி தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் உள்ளகத் கணக்காய்வாளரால் உள்ளகத் கணக்காய்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.	தொடர்புடைய சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங் களுக்கு இணங்க உள்ளக கணக்காய்வாளரி ன் சேவைகள் பெறப்பட வேண்டும்.
(ஆ)	லங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவையின் xxviii ஆம் அத்தியாயத்தின் 1:1 பிரிவு மற்றும் 2006 மே 30 ஆந் திகதிய 09/2006 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை	அரச உத்தியோகத்தர்களின் அலுவலக நேரம் முற்பகல் 8.30 முதல் பிற்பகல் 4:15 வரையாக இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் கல்லூரியின் கல்விசார் பதவியணி பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பெயரில் நியாயமான இனங்கும் வேலை செய்யும் நேரத்தை (Flexible Time) அடிப்படையாகக் கொண்டு வருகை மற்றும் வெளியேறல்களை மேற்கொள்ளப்படுவது 26 உத்தியோகத்தர் களுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதயையின் போது கண்டறியப்பட்டது	இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், தொழிற்கல்வி தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தால் ஒரு விசாரணையும் நடத்தப்பட்டுள்ளது.	தாபன விதிக்கோவை மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கை என்பவற்றிற்கு இணங்க வருகை மற்றும் வெளி யேறல் கள் பதிவு செய்யப்பட வேண்டும்.
(இ)	இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாண கோவை			
	i. நிதிப் பிரமாணம் 187(3)	பணம் பொறுப்பேற்றல் அலுவலகம் திறைசேரி அல்லாத நிறுவனங்களிடம்	அப்போதைய கணக்குப் பிரிவு பதவியணி பற்றாக்குறை	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம்

		இருந்து கிடைக்கின்ற பணத்தை உரிய நிறுவனத்தினால் பேணி செல்லப்படுகின்ற வங்கி கணக்கு ஒன்றில் நாளாந்தம் அல்லது தாமதமின்றி முடியுமான அளவு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் கல்லூரிக்கு சொந்தமான 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை காணப்பட்ட ரூபா 1,908,897 பணத்தை வங்கியில் வைப்பு செய்யாமல் கையில் வைக்கப்பட்டு 2025 பெப்ரவரி 03 ஆந் திகதி வங்கியில் இடப்பட்டிருந்ததுடன் அத்தொகையில் ரூபா 1,884,000 தொகை மாணவர்கள் அனுமதியின் போது அறவிடப்பட்ட கட்டணங்கள் ஆகும்.	காணப்பட்டமையால் தொகுதியின் சிக்கலான சூழல் காணப்பட்ட காரணத்தினால் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளது எவ்வாறாயினும் கணக்கு பிரிவில் சிறாப்பர் (Shroff) பதவி ஒன்று இல்லாமல் இருந்ததுடன் பணமாக பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவள் மிகவும் சிக்கலான செயற்பாடாடு ஒன்றாக இருந்ததுடன் .ந்த வைப்புத் தொகையை நேரடியாக நிறுவனத்தின் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கைகளை தயாரிக்குமாறு நிர்வாக அதிகாரியால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.	பெறப்பட்ட அனைத்துப் பணத்தையும் நாளாந்த வங்கியில் செலுத்தப்படுவதை உறுதி செய்வதற்கும், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை அறிமுகப்படுத்துவதற்கும் அவற்றின் செயலாக்கத்தை கண்காணிப்பதற்கும், கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
	ii. நிதிப் பிரமாணம் 757(2)	கல்லூரியினால் மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மயாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருக்கவில்லை	2025 ஆம் ஆண்டில் இந்த பொருட் கணிப்பீட்டினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு குறித்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்
(ஈ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள சுற்றறிக்கையி ன் நிறுவன கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டி மற்றும் அரசாங்க பொது முயற்சிகளுக்கு சொந்தமான (SOEs) இற்கான செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பந்தி	நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் முதலாவதாக 2025 யூன் 03 ஆந் திகதி சமர்ப்பிக்கப் பட்டிருந்ததுடன் திருத்திய நிதிக் கூறுகள் 2025 செப்டம்பர் 03 ஆம் திகதி மீண்டும் சமர்ப்பிக்கப் பட்டிருந்தன	அப்போது காணப்பட்ட பதவியணி பற்றாக்குறையினால் ஏற்பட்ட சிக்கலான வேலைச் சூழலில் தாமதம் இடம்பெற்றுள்ளதுடன் எதிர்காலத்தில் அவ்வாறு இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செயற்பாட்டு கையேட்டின் நியதிகளுக்கு இணங்க, வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். .
(உ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம்	பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் பெற்றுக் கொள்ளப்படுகின்ற செயல்	இது தொடர்பாக உரிய கட்டுநிதியைப் பெற்றுக் கொள்வதற்கு	நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்

இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தி	நிமிர்த்த கட்டுநிதி அச்செற்பாடு முடிவடைந்த திகதி முதல் 10 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டிற்குரிய மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது கல்லூரியால் 17 சந்தர்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 5,980 முதல் ரூபா 100,000 வரையான வீச்சில் காணப்பட்ட மொத்தம் ரூபா 458,720 ஆன செயல் நிம்த்த கட்டுநிதி உத்தியோகத்தர் களால் 07 நாட்கள் முதல் 38 நாட்கள் வரையான காலதாமதத்துடன் தீர்வு செய்யப்பட்டிருந்தது	உத்தியோகத்தர்களை அறிவுறுத்தப்பட்டுள்ளடன் கட்டுநிதி தீர்ப்பனவு தொடர்பாக பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	பிரகாரம் முற்பணங்கள் வழங்குதல் தீர்வு செய்யப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 28,847,489 பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டதுடன் அதற்கு நேரொத்த கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா 35,500,265 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 6,652,776 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மொத்த வருமானம் ரூபா 29,903,623 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துலத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாணவர் முகாமைத்துவ நடவடிக்கைகள் மற்றும் ஏனைய கல்விச் செயற்பாடுகளுக்காக கற்றல் முகாமை முறைமையொன்றை (LMS) நிறுவுவது குறித்து பல ஆண்டுகளாக கலந்துரையாடல்கள் நடைபெற்று வந்த போதிலும், 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தொடர்புடைய பணியை நிறைவேற்றுவதற்கு கல்லூரி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.	கலந்துரையாடலுக்கு உட்பட்டு கற்பித்த முகாமைத்துவ முறைமைக்காக (LMS) இற்கான விலை விபரங்கள் கோரிய நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட தீர்வு, எங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யாததால் அது கலந்தரையாடல் கட்டத்திலேயே கைவிடப்பட்டது.	நிறுவனத்தின் தேவைகள் இனங்காணப்பட்டு ஏற்ற கற்றல் முகாமைத்துவ முறைமையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	கல்வி மற்றும் துறை தொழில் விரைவாக மாறும் சமூக பொருளாதார மற்றும் தொழில்நுட்ப போக்குகளினால் உருவாகும் வேண்டுகோளின் பேரில் மற்றும் சிக்கல்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக பணிக் கூற்றில்	பாடநெறி விடயப் பரப்பினையை நாளது வரையாக்குதல் தொழிற் கல்வி தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் மற்றும் மூன்றாம் நிலைகல்வி	மாறுபடும் தொழில்முறைத் தேவைகள் மற்றும் புதிய தொழில்நுட்பத்திற்கு ஏற்ப, கல்லூரியால்

குறிப்பிடப்பட்டுள்ள போதும் கல்லூரியால் பேணிச் செல்லப்படுகின்ற 10 பாடங்களில் பாடநெறிகளில் 06 மாத்திரம் 2013 ஆம் ஆண்டில் முதல் முறையாக (1st publication) அறிமுகப்படுத்தப்பட்டு விடய பரப்புடன் கூடியதாக இருந்ததுடன் மீளாய்வாண்டின இறுதி தி திகதி வரையில் அப்பாடங்களுக்கு உரிய விடயப் பரப்பினை மறு சீரமைப்பதற்கு / நவீனமயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	ஆணைக்குழு (TVEC) மற்றும் தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகாரசபை (NAITA) ஊடாக மேற்கொள்ளப் படுகின்றது தற்போது இரத்மலான பல்கலைக்கழக கல்லூரி (TVEC) இணையதளத்தின்மூலம் வெளியிடப்பட்டு பதிவிறக்கக்கூடிய தற்போது பாடநெறி விடயங்களை கல்வி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன.	நடாத்திச் செல்லப்படும் பாடத்திட்டங்களைத் திருத்தியமைக்கவும் / புதுப்பிக்கவும் ஒரு வேலைத்திட்டத்தை உருவாக்கிப் பராமரித்துச் செல்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துலத்தின் கருத்துரை	பரிந்துரை
Skill Sector Development செயற்திட்டத்தின் கீழ் 2023 ஆகஸ்ட் 09 ஆம் திகதி கல்லூரிக்கு கிடைத்திருந்த ரூபா 3,146,000 பெறுமதியான 11 டெஸ்டொப் கணனிகள் மற்றும் இலகு பலகைகள் (Smart Board) என்பன எவ்வித பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரையில் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.	தற்போது அப்பொருட்கள் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டு வருகின்றது.	கல்லூரியின் சொத்துக்களில் இருந்து முழுமையாக பயன்பாட்டினை பெற்றுக் கொள்ளும் வகையில் பயன்படுத்தப்பட்டதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதி செய்ய வேண்டும்.

3.3 மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துலத்தின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 ஆந் திகதி காணப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட 54 பதவிகளில் 13 அதாவது 24 சதவீதம் அளவில் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் அவ் வெற்றிடங்களில் 5 விரிவுரையாளர் பதவிகள், உதவி நூலகர் பதவி ஒன்று, 03 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் உள்ளடங்கியிருந்தன மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் தேவையான ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்கு அல்லது தேவையான பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்தம் செய்வதற்கு கல்லூரி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அனைத்து விரிவுரையாளர் பதவிகள், உதவி நூலகர் பதவி முகாமைத்துவ உதவியாளர் பதவி 01 என்பவற்றிற்காக ஆட்சேர்ப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் அதற்கான ஆட்சேர்ப்பிற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப பதவியணியினைரத் திருத்தம் செய்வதற்கும் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.